Registered as a Newspaper · பக்கங்கள் 04 · விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM · மக்கள் தினசரி · Peoples Daily

நாதம் 04 · திருவள்ளுவர் ஆண்டு 2024 · கார்த்திகை 14 · ( 29-11-93 ) · திங்கட்கிழமை · ஓசை 284

## மலத்தியோன் கொண்டுவருவதில் அதிகாரிகள் அசிரத்தை

வெற்று பீப்பா விற்ற பணம் உரிய காலப் பகுதியிலே கிடைக்காததினாலேயே மலத்தியோன் பவுடர் உரிய காலப் பகுதியில் பெறமுடியாமல் போனதாக மலேரியா தடுப்பு பகுதியின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். உணவுப் பொருள் களுடன் கப்பலில் மலத்தியோன் பவுடர் பக்கற்றுகள் ஏற்றமுடியாது. இவற்றை பீப்பாவில் அடைத்தால் மட்டுமே கப்பலில் இடவசதி தரமுடியும் என கப்பல் நிறுவனம் தெரிவித்ததை தொடர்ந்து இவ் ஆண்டு மார்ச் மாதம் பீப்பாவில் அடைக்கப் பட்டு மலத்தியோன் கொண்டுவரப்பட்டது. இவ் வெற்று பீப்பாக்களை மீண்டும் கப்பலில் கொண்டுசெல்லமுடியாது என்பதனால் இவற்றைவிற் (4-ம் ம்பக்கம் பார்க்க)

## பொன்னாலை குடியிருப்புகள் மீது புக்காரா குண்டுத்தாக்குதல்

### பலவீடுகள் சேதம்

(தொல்புரம்)

சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான புக்காரா குண்டுவீச்சு விமானம் ஒன்று பொன்னாலை குடியேற்றத் திட்ட குடிமனைகள் மீது குண்டுகளைவீசியதில் நான்கு வீடுகள பலத்த சேதத் திற்குளளாகின.

நேற்று மாலை 5. 35 மணியளவில் இடம்பெற்ற இக் குண்டுத்தாக்குதலின் போது மார்க்கண்டு அம்பிகாவதி, மார்க்கண்டு துரைராசா, செல்லர் பாலசுந்தரம், சின்னத்துரை தங்கம்மா ஆகிய நால்வரினது வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாகியதுடன் அம்பிகாவதி என்பவரின் வீட்டிற்கு முன்னால் பாரிய குழி ஒன்றும் ஏற்பட்டுள்ளது

இக் குண்டுவீச்சு விமானம் பொன்னாலை, மூளாய், தொல்புரம், சுழிபுரம் பகுதிகளை பலமுறை வட்டமிட்ட பின் திடீரென தாழப்பறந்து பொன்னாலைச் சந்தியை அண்மித்த குடியேற்றத்திட்ட குடிமனைகளை மையமாக வைத்து குண்டு வீச்சினை மேற்கொண்டது. அவ்வேளை வீடுகளில் இருந்து மக்கள் ( 4ஆம் பக்கம் பார்க்க )

## நள்ளிரவு குண்டு வீச்சு

மானிப்பாய் வைத்திய சாலை பகுதிமீது சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய குண்டுத் தாக்குதலில் பெண்மணி ஒருவர் காயமடைந்ததுடன் பல குடியிருப்புக்களும்சேதமடைந்துள்ளன

நேற்று நள்ளிரவுவேளை மேற்படி பகுதி மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின்போது நித்திரையிலிருந்த நாகராசா நாகேஸ்வரி (வயது 40) என்ற பெண் படுகாயமடைந்துள்ளதுடன் அப் பகுதியில் இருந்த பல வீடுகளும் சேதமடைந்துள்ளன

## மக்கள்மீதான விமானத்தாக்குதல்; கண்டித்து மெளன ஊர்வலம்

(குருநகர்)

புனித யாகப்பர் தேவாலயத்தின் மீதான விமானத் தாக்குதலையும், இதர வழிபாட்டுத் தலங்கள், மருத்துவமனை, பாடசாலைகள், செயலகம், பொதுமக்கள் குடியிருப்புகள்மீதான தாக்குதல்களையும் கண்டித்து எதிர் வரும் 3ஆம் திகதி காலை 9மணிக்கு மாபெரும் மெளன ஊர்வலம் ஒன்று நடத்தப் படஉள்ளது.

புனித யாகப்பர் ஆலய பங்கு மக்களால் நடாத்தப் படும் மேற்படி மெளன ஊர் வலம் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு யாழ் அரச அதிபர் பணிமனையை நோக்கி நடாத்தப்பட இருப் பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்வலத்தில் யாழ். மறை மாவட்டத்திலுள்ள ஏனைய பங்கு மக்கள், மற்றும் சர்வ மத தலைவர்கள், பொது மக்கள், பாடசாலை மாணவ - மாணவிகள் பெருமளவில் கலந்துகொள்வர்

ஆலயப் பங்கு மக்களால் தயாரிக்கப்பட்ட மகஜரின் பிரதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பணிமனை, யாழ. அரச அதிபர் பணிமனை ஆகியவற்றில் கையளிப்பதுடன் மெளன ஊர்வலம் கலைந்து செல்லும் எனவும் தெரிவிக் (4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத் தளபதி வைத்தியரெட்னா மீது ஜனாதிபதி விஜேதுங்க நம்பிக்கையிழப்பு!

## தொடரும் இராணுவ தோல்விகள் காரணமாம்

(லண்டன்)

சிறிலங்கா இராணுவத்திற்கு அண்மையில் ஏற்பட்டுள்ள பாரிய பின்னடைவுகளைத் தொடர்ந்து இராணுவத்தளபதி சிசில் வைத்திய ரெட்னா மீது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க நம்பிக்கை இழந்து விட்டதாக தெரியவருகின்றது. இதன் வெளிப்பாடே வடக்கில் நடைபெறும் போரில் அரசபடைகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பு மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வாவிடம் ஒப்படைக்கப்பட்டமையாகும் என பி. பி. ஸி நேற்றிரவு தெரிவித்தது.

இது குறித்து பி பி. ஸி. மேலும் கருத்து தெரிவிக்கை சில்வாவை ஓராண்டு பதவி நீடிப்பு வழங்கி வடபகுதி நட பதி சிசில் வைத்தியரட்ன விற்கு சிறு மூக்கறுப்பு என் தாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் அரசபடைகள்

## தாக்குதல் குறித்த அச்சத்தினால் இராணுவ முகாம்கள் வாபஸ்

### மன்னார் சிறப்புத்தளபதி ஜான் விபரிப்பு

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவர் என்ற அச்சத் தினாலும் பூநகரியில் கொல்லப்பட்ட காயமடைந்த படையினருக்கு பதிலாக படையினரை ஈடுபடுத்தவுமே சிலாவத்துறை, கொண்டச்சி டுத்தளம் அழிக்கப்பட்டமை அரசுக்கு கொடுத்த தாக்கமே சிலாவத்துறை, கொண்டச்சி முகாம் ளிலிருந்து இராணுவத்தை எடுக்க வேண்டிய நிலையை தோற்றுவித்தது.

சிலாவத்துறை கொண்ட

இவற்றிலிருந்து இராணுவம் வெளியேறியமையால் முசலி உதவிஅரச அதிபர் பிரிவில் 36 கிராமங்கள் விடுவிக்கப் பட்டுள்ளன. மன்னார்பெருநிலப் பரப்பில் இராணுவ அச்சுறுத் தல் இல்லாமற்போயுள்ளது.

# ஜனாதிபதி விஜேதுங்க நம்பிக்கையிழப்பு!

## தொடரும் இராணுவ தோல்விகள் காரணமாம்

(லண்டன்)

**சிறிலங்கா இராணுவத்திற்கு அண்மையில் ஏற்பட்டுள்ள பாரிய பின்னடைவுகளைத் தொடர்ந்து இராணுவத்தளபதி சிசில் வைத்திய ரெட்னா மீது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க நம்பிக்கை இழந்து விட்டதாக தெரியவருகின்றது. இதன் வெளிப்பாடே வடக்கில் நடைபெறும் போரில் அரசபடைகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பு மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வாவிடம் ஒப்படைக்கப்பட்டமையாகும் என பி. பி. ஸி நேற்றிரவு தெரிவித்தது.**

இது குறித்து பி பி. ஸி. மேலும் கருத்து தெரிவிக்கையில் ஜெரிடி சில்வாவின் புதிய பொறுப்பிற்கு நடவடிக்கை இயக்குனர் என்பது பெயர். ஓய்வுபெற இருந்த ஜெரி டி. சில்வாவை ஓராண்டு பதவி நீடிப்பு வழங்கி வடபகுதி நடவடிக்கைகளுக்கு மேற்பார்வையிடும் பொறுப்பை ஜனாதிபதி வழங்கியுள்ளார் என்றால் தற்போதைய இராணுவ தளபதி சிசில் வைத்தியரட்னவிற்கு சிறு மூக்கறுப்பு என்பதே பொருள். இதேவேளை இராணுவத்தளபதி சிசில் வைத்தியரட்ன ஜனாதிபதியின் இம் முடிவை எதிர்ப்பதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் அரசபடைகள் அடுத்தடுத்து பின்னடைவு கண்டமைக்கு முப்படைகளிடையே சரியான ஒருங்கிணைப்பு காணப்படாததே காரணம் என தெரிவிக்கப்படுகிறது. எனவே வடக்கில் முப்படை நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க ஒரு ஒருங்கிணைப்பாளரை நியமிக்க வேண்டும் எனும் கருத்து அண்மைய சம்பவங்களில் இருந்து பெற்ற ஒரு படிப்பினை.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் குறித்த அச்சத்தினால் இராணுவ முகாம்கள் வாபஸ்

### மன்னார் சிறப்புத்தளபதி ஜான் விபரிப்பு

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவர் என்ற அச்சத்தினாலும் பூநகரியில் கொல்லப்பட்ட காயமடைந்த படையினருக்கு பதிலாக படையினரை ஈடுபடுத்தவுமே சிலாவத்துறை, கொண்டச்சி முகாம்களை கைவிட்டு சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர் என மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி ஜான் புலிகளின் குரல் வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மண்கிண்டிமலை முகாம் தகர்க்கப்பட்டமை சிறிலங்கா இராணுவத்திற்கு கொடுத்த தாக்கத்தினால் 20 மைலுக்கும் கூடுதலான இடத்திலிருந்து இராணுவத்தை விலக்கியது. தற்போது பூநகரி கூட்டுத்தளம் அழிக்கப்பட்டமை அரசுக்கு கொடுத்த தாக்கமே சிலாவத்துறை, கொண்டச்சி முகாம்களிலிருந்து இராணுவத்தை எடுக்க வேண்டிய நிலையை தோற்றுவித்தது.

சிலாவத்துறை கொண்டச்சி இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் சுலபமாக தாக்கி அழித்துவிடுவர் என்பது இராணுவத்தலைமைக்கு தெரிந்திருந்தது. அத்துடன் பூநகரியில் கொல்லப்பட்ட காயமடைந்த ஆயிரக் கணக்கான படையினருக்கு ஈடாக ஆட்கள் தேவைப்படுகின்றனர். அதற்காக ஆட்களை நிரப்புவதும் இதனின் ஒரு நோக்கமாகும். சிலாவத்துறை, கொண்டச்சி முகாம்கள் 6 மைல் விஸ்தீரணம் உள்ளவை இவற்றிலிருந்து இராணுவம் வெளியேறியமையால் முசலி உதவிஅரச அதிபர் பிரிவில் 36 கிராமங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. மன்னார் பெருநிலப் பரப்பில் இராணுவ அச்சுறுத்தல் இல்லாமற்போயுள்ளது.

கேந்திரமுக்கியத்துவமான சிலாவத்துறை எல்லா வளங்களையும் கொண்டிருந்ததால் அரசு இங்கு குடியேற்றங்களை நிறுவி அதற்கு பாதுகாப்பாக சிலாவத்துறை முகாமை அமைத்தது. இங்கு இராணுவத்தால் 6000 ற்கு மேற்பட்ட தென்னைகள் அழிக்கப்பட்டுள்ளன. இப் பகுதி சுடுகாடுபோல் உள்ளது எனவும் ஜான் மேலும் தெரிவித்தார்.

## பதவிக்காலம் முடிவடைந்ததும் சிசில் உடன் ஓய்வுபெறுவார்!

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரெட்னா அடுத்த ஆண்டு ஓய்வுபெறஇருக்கிறார் சேவையில் இருந்து ஓய்வுபெற்றதும் ஒரு நிமிடம்கூட பதவியில் இருக்கப்போவதில்லையென்று அவர் முடிவெடுத்துள்ளதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம்காட்டி பி. பி ஸி. செய்திவெளியிட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களும், இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பதவி மாற்றங்களும் இராணுவத் தளபதியை இம் முடிவுக்கு கொண்டு சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிசில் வைத்தியரெட்னா இராணுவத் தளபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் வடக்கில் விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற யுத்தத்தின் போது இராணுவம் பல தோல்விகளைச் சந்தித்தது. இதனால் இராணுவத் தளபதியின் திறமை குறித்து பல விமர்சனங்கள் தெரிவிக்கப் பட்டது.

இதைத் தொடர்ந்து இராணுவக் கட்டமைப்பிலும் பல தடவைகள் மாற்றம் செய்யப் பட்டது இவ்வாறான அரசின் நடவடிக்கைகளினால் சிசில் வைத்தியரட்னா மேற்படி முடிவுக்கு வந்ததாகத் தெரியவருகிறது.

## வீரச்சாவு

### லெப். செங்கதிர்

கடந்த 11ஆம் திகதி பூநகரி முகாம் தகர்க்கப்பட்ட தாக்குதலில் விழுப்புண் ஏற்று சிகிச்சை பெற்றுவந்த லெப்டினன்ட் செங்கதிர் / நிருபன் (தம்பித்துரை மோகன் காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்) நேற்று முன்தினம் வீரச்சாவு அடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

★

### 2-ம் லெப். நிறைஞ்சன் (செங்கையன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற விமானத் தாக்குதலின் போது காயமுற்றிருந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் கடந்த 26 ஆம் திகதி நள்ளிரவு 12மணியளவில் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2ஆம் லெப்டினன்ட் நிறைஞ்சன் / செங்கையன் (மகாதேவன் சுதாகரன், 23மத்திய வீதி உவர்மலை திருகோணமலை) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இன்று ஆண்டிறுதித் தேர்வு

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்கள பரீட்சைச் சபை நடாத்தும் ஆண்டிறுதித் தேர்வு திட்டமிட்டவாறு இன்று நடைபெறவுள்ளது. இன்று ஆண்டு 6, 7 வகுப்புகளுக்கான பரீட்சை ஆரம்பமாகும்.

## வடக்கு இராணுவத்திற்கு பொருள் சேகரிப்பதெப்படி?

### இன்று விசேட மாநாடு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினருக்கு தேவையான பொருள்களை எவ்வாறு சேகரிப்பது என்பது குறித்து இன்று கொழும்பில் விசேட மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது உணவுக் கூட்டுறவுத் துறை ஜனசக்தி அமைச்சர் வீரசிங்கமல்லிமாராச்சி தலைமையில் இம்மாநாடு நடைபெறும்.

இம்மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ன ஆகியோரும் கலந்து கொள்வர்.

## தொழிலாளர் நலன் பேணப்படாவிடில் அரசில் இருப்பதில் அர்த்தமில்லை

### அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

தொடர்ந்து ஐக்கியதேசியக் கட்சியுடன் உறவை வைத்துக் கொள்ளுவது தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்த விதத்திலும் நன்மை பயக்கப் போவதில்லை. தோட்டத் தொழிலாளர்களின் நலன்கள் பாதிக்கப்படுமானால் அரசாங்கத்துடனான எமது உறவை துண்டித்துக்கொள்ள தயங்கமாட்டோம் என அமைச்சர் எஸ் தொண்டமான் 'சந்தேசிய'விற்கு அளித்தபேட்டியில் தெரிவித்தார்.

அவர் அப்பேட்டியில், இன்று இ. தொ. கா விற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான உறவு நிலை குறித்து நேற்று இ.தொ காவின் கூட்டத்தில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து தோட்டத் தொழிலாளரின் நலன் பாதிக்கப்படுமானால் அரசாங்கத்துடனான எமது உறவை கட்சி உடன் முறித்துக் கொள்ளும் இதில் எதுவித சந்தேகமும் இல்லை.

எமதுநியாயமான கோரிக்கைகளுக்கு இன்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை எதுவித அக்கறையும் செலுத்தியதாகத் தெரியவில்லை. இவ்வாறான நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்ந்து உறவை வைத்துக் கொள்வது எந்த வகையிலும் நன்மையைத் தரப்போவதில்லை என்றார்.

நேற்று மாலை நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் இதுவரைஅரசாங்கத்துடனும் காமினி திசாநாயக்கவுடனும்

(4.ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் இரவு பகலாக விமான நடமாட்டம் அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் வான் பரப்பில் கடந்த மூன்று தினங்களாக சிறிலங்கா விமானப் படையினரின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இரவு பகலாக குண்டுவீச்சு விமானங்கள், அவ்ரோ விமானங்கள், உலங்கு வானூர்திகள் என்பன சீரற்ற கால நிலையின் மத்தியிலும் பறந்து திரிந்தவண்ணம் இருந்தன.

நேற்றும் பல தடவைகள் அவ்ரோ விமானங்கள் பலாலி விமானத்தளத்தில் இறங்கி ஏறிய வண்ணம் இருந்தன.

நேற்று இரவிரவாக குண்டு வீச்சு விமானங்கள் யாழ். குடாநாட்டின் வான் பரப்பில் வட்டமிட்ட வண்ணம் இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது

இதேவேளை பலாலி, ஆனையிறவு, மண்டைதீவு பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் இரவு பகலாக மக்கள் குடியிருப்புகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளனர்.

## வரி விளம்பரம்

### கலைஞர்கள் தேவை

நல்ல குரல் வளம் உடையோரும், இசைக்கருவிகளையும் வாசிக்க தெரிந்தோரும், உடன் தேவை ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம், விண்ணப்பிக்க வேண்டிய முகவரி. விளம்பர இல- 206, ஈழநாதம் இல. 31 மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (6715)

### உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள்

உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும் சகலமணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-7849)

### மாமைட் போத்தல் தேவை

பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய சகல அளவிலுமான வெற்றுமாமைட் (MARMITE) போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகின்றது. ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட் 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-8004)

### கிராமிய வங்கியில் ஒய்வூதியம்

(கொழும்புத்துறை)

கொடிகாமம், சாவகச்சேரி கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுவோருக்கான நவம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதியம் தற்சமயம் வழங்கப்பட்டுவருகிறது. (24)

### பயிற்சிநெறி

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர சபையினால் நடத்தப்படவுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒரு மாதப் பயிற்சிநெறி இடம்பெறவுள்ளது,

இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள அந்தப் பயிற்சிநெறியில் கலந்து கொள்ள இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் உடன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்களால் நடத்தப்படும் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் தமது

## மலேரியா நோய் பரவுகிறது

(சொழும்புத்துறை)

கொழும்பு, கிளிநொச்சிப் பகுதிகளில் மலேரியாநோய் அதிதீவிரமாகப் பரவி வருவதாக அங்கிருந்து வந்தவர்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் தெரிய வருகிறது இதே வேளை மலத்தீன் மருந்து தட்டுப்பாட்டால் நுளம்புத் தொல்லையைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது

வடமராட்சி கிழக்குப் பிரிவிலும் இந்நோய் அதிகரித்து காணப்படுவதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது (24)

## முக்கிய அறிவித்தல்

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

### யாழ் மாவட்டம்

எதிர்வரும் புதன்கிழமை 1-12-93 பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். மாவட்ட பொதுச் சபைக் கூட்டமும் 4.00 மணிக்கு யாழ் கோட்ட பொதுச்சபைக் கூட்டமும் எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் நடைபெறும் முக்கியமான விடயங்கள் பல கலந்துரையாட இருப்பதால் நிர்வாகிகள், ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொளகிறோம்

பொதுச் செயலாளர்

(சி-8017) யாழ் மாவட்டம்

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளைத் தலைமையகம்

(1) Sony T.V. (20'' குறையாத அளவில்)
(2) National Deck - Model No. L 15 / L 18

ஆகியன எமது கல்விச்சேவைக்கு தேவைப்படுகின்றன எனவே அவற்றின் விலையையும், தரவுகளையும் பதிவுத் தபல் மூலம் தபால் உறையின்மேல் ''T.V. Deck'' என்பதை எழுதி 10-12-93-ற்கு முன்னதாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
26-11-93

கௌரவ செயலாளர்,
இ. செ. சி சங்கம்,
யாழ். கிளை

(சி/8014)

## பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள்

### கல்வியாண்டு 1994/95

பின்வரும் பாடநெறிக்கான விரிவுரைகள்

5-12-93 இல் ஆரம்பமாகின்றன

**கலைமாணி** B A.

**விஞ்ஞானமாணி** B Sc (புள்ளி விபரவியல்)

## அநுரா கட்சி மாறியமை தந்தைக்கு செய்த பேருதவி

எஸ். பீ. திசாநாயக்க

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்கா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகிச் சென்றமை அவரது தந்தையாருக்கு செய்த பெரும் உபகாரமாகும். இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எஸ். பீ. திசாநாயக்க கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; சுதந்திரக் கட்சியின் நெருக்கடியில் பிரதான நடிகராக அநுரா விளங்கினார் இந்த நெருக்கடியால் திருமதி சிறிமாவோவும், அக் குடும்பத்தின் சகோதர சகோதரிகளும், கட்சிக்கு வாக்களித்த மக்களும் சுமார் பதினேழு வருடங்களாக பாதிக்கப்பட்டனர். தற்போது தடைகள் இல்லை எனவும், இனி கட்சி முன்னேறிச் செல்லலாம் எனவும் தெரிவித்தார். 1956-ல் கட்சியின் செயலாளரான பெர்னாட் அலுவிகார, 1960 இல் கலாநிதி டபிள்யூ தசநாயக்கா, 1968இல் கட்சியின் பிரதித் தலைவர் ஆர் ஜீ. சேனநாயக்கா போன்றோர் கட்சியிலிருந்து விலகிச் சென்றதை ஒத்ததே அநுராவின் வெளியேற்றமும் ஆகும். இவர்கள் அனைவரும்பின்னர் அரசியல் அலையில் அடிபட்டுச் சென்றதும் தெரிந்ததே எனவும் அவர் விபரித்தார்.

## 31-ம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 17 — 04 — 1960

உதிர்வு: 30 — 10 — 1993

### திருமதி புஷ்பதேவி செல்வராசா

ஓ ........ராதாவே
நினையாத நேரம் அணைந்த ஒளிவிளக்கே
மீண்டுவரும் நினைவலையால் உருகிநிற்கும்
எம்முள்ளம் எந்நாளும் உம்மையே எண்ணும்
உம்பிரிவால் ஏங்கும் எம்துயர் பாரும் ராதா.

29-11-1993 இன்று நிகழவிருக்கும் 31ஆம் நிறைவு நாள் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உம் ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும்
அன்பு கணவன், பிள்ளைகள் ஜெனோவா,
ஜெகதீஸ், ஜெனிஸ், ஜெயந்,
தந்தையார், தாயார், சகோதரர்கள்,
மற்றும் உற்றார், உறவினர்கள்.

ராஜ் மகால்,
ஊரெழு.

(6713)

## யாழ். வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ் போதனா வைத்தியசாலையில் சில முக்கியமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சில அத்தியாவசிய மருந்து வகைகளுக்கும், சில ஊசிமருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிய வருகிறது.

முக்கியமாக பிறந்தவுடன் சிசுக்களுக்கு போடப்படும் காச நோய்த் தடுப்பூசிக்கு (பி.பி ஜி) கடந்த ஒருவார காலமாக பலத்த தட்டுப்பாடு நிலவி வருகிறது (24)

## நிதி ஒதுக்கீடு

(கொழும்புத்துறை)

வலிகாமம் வடக்கு பிரதேச சபை செயலகத்துக்கு 1994 ஆம் ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட பிரதேச அபிவிருத்தித் திட்டத்துக்கென பத்துலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (24)

## 6-ம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
1965-03-07

தாயக மண்ணில்
1987-11-29

சண்டிலிப்பாயில் இந்திய ராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

### வீரவேங்கை குலம் (அருணா)

(மார்க்கண்டு விஜியானந்தம்)

கருவினில் வளரும் மழலையின் உயிரில்
தைரியம் வளர்ப்பாள் தமிழ் அன்னை
களங்கம் நேர்ந்தால் பெற்றவள் மானம்
காத்திட எழுவான் அவள் பிள்ளை.

வீரமாணிக்கதேவன்துறை,
மயிலிட்டி.

குடும்பத்தினர்.

(6714)

## நினைவு கூருகின்றோம்..
## 29 11. 1993

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி, திருவையாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

அசோக் (சீவரட்ணம் மேல்சொலமன் இலங்கைராசன்- கெருடாவில், சாவகச்சேரி-யாழ்.)

1987ஆம் ஆண்டு, தமிழகம் வேதாரணியம் பகுதியில் - இந்திய சுங்க இலாகாவினர் மேற்கொண்ட

(கொழும்புத்துறை)

கொடிகாமம், சாவகச்சேரி கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுவோருக்கான நவம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதியம் தற்சமயம் வழங்கப்படடுவருகிறது. (24)

## பயிற்சிநெறி

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர சபையினால் நடத்தப்படவுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒரு மாதப் பயிற்சி நெறி இடம்பெறவுள்ளது,

இன்று திங்கட்கிழமை ஆரம்பமகவுள்ள அந்தப் பயிற்சிநெறியில் கலந்துகொள்ள இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் உடன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்களால் நடத்தப்படும் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் தமது சனசமூக நிலையங்கள ஊடா விண்ணப்பிக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது

மேற்படி பயிற்சிநெறியில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விரிவுரை வழங்குவர். (24)

## மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் மாவீரர்களது பெற்றோரைக்கௌரவிக்கும் விழா கல்லூரி அதிபர் திருமதி இ. நந்தகுமார் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் 25-ம் திகதி வெகுவிமரிசையாக நடைபெற்றது கல்லூரியின் அபிவிருத்திச் சபை இம் மாவீரர்களது பெற்றோரைக் கௌரவிக்கும் விழாவுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தது (25)

---

யும் பதிவுத் தபால் மூலம் தபால் உறையின்மேல் "T.V. Deck" என்பதை எழுதி 10-12-93-ற்கு முன்னதாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
26-11-93

கௌரவ செயலாளர்,
இ. செ. சி சங்கம்,
யாழ். கிளை

(சி/8014)

---

## பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள்

### கல்வியாண்டு 1994/95

பின்வரும் பாடநெறிக்கான விரிவுரைகள்

**5-12-93 இல் ஆரம்பமாகின்றன**

**கலைமாணி** B A.

**விஞ்ஞானமாணி** B Sc (புள்ளி விபரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். 1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 2-12-1993**

விண்ணப்பப் படிவத்தினையும், விபரத் திரட்டினையும் பெறவிரும்புவோர் ரூபா 10 பெறுமதியான முத்திரையை அனுப்பி நேரிலோ அல்லது தபால் மூலமோ பெற்றுக்கொளளலாம்.

விபரங்களுக்கு:
உதவிப் பதிவாளர்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக கடந்த 15 வருடங்களாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ் நகரில் இதுவே.

(சி-7819)

---

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

கணனி கல்வி நிலையங்களுடன் இணைந்து நடாத்தும்

## "கணனி, இலத்திரனியல் கண்காட்சி"

1993 நவம்பர் 10-ம், 11-ம், 12-ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கென விளம்பரப்படுத்தப்பட்டு 10-ம் திகதியுடன் இடை நிறுத்தப்பட்ட மேற்படி கண்காட்சி, மீண்டும் 1993 டிசெம்பர் 1-ம், 2-ம், 3-ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படு மென்பதை அறியத்தருகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பிரவேசம்: ரூபா 10/- சிறுவர்களுக்கு ரூபா 5/-**

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

(சி-8000)

---

1960  1993

## திருமதி புஷ்பதேவி செல்வராசா

ஓ ........ராதாவே
நினையாத நேரம் அணைந்த ஒளிவிளக்கே
மீண்டுவரும் நினைவலையால் உருகிநிற்கும்
எம்முள்ளம் எந்நாளும் உம்மையே எண்ணும்
உம்பிரிவால் ஏங்கும் எம்துயர் பாரும் ராதா.

29-11-1993 இன்று நிகழவிருக்கும் 31ஆம் நிறைவு நாள் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உம் ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும்
அன்பு கணவன், பிள்ளைகள் ஜெனோவா,
ஜெகதீஸ், ஜெனிஸ், ஜெயந்,
தந்தையார், தாயார், சகோதரர்கள்,
மற்றும் உற்றார், உறவினர்கள்.

ராஜ் மகால்,
ஊரெழு.

(6713)

---

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**மங்கையற்கண்ணி (தேவி)**

மலர்வு: 19-7-1964
உதிர்வு: 24-11-1988

**திதி: 29-11-1993**

காலத்தின் நகர்வில் கரைந்தது ஐந்தாண்டு
கண்ணோடு வழிகின்ற நீர்மட்டும் மாறவில்லை.
அன்பாலே எம் மனதை மூழ்கடித்த
எம் உயிரே!
காரணத்தைச் சொல்லாது நீ கனவாகிப்
போனது ஏன்?
நாட்கள் எத்தனை நகர்ந்திங்கே மறைந்தாலும்
இனிய உன் நினைவு இதயத்தால் மறைந்திடுமோ
ஓம் சாந்தி

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

என்றும் உன் நினைவில்
- குடும்பத்தினர்

(6710)

---

(மார்க்கண்டு விஜியானந்தம்)

கருவினில் வளரும் மழலையின் உயிரில்
தைரியம் வளர்ப்பாள் தமிழ் அன்னை
களங்கம் நேர்ந்தால் பெற்றவள் மானம்
காத்திட எழுவான் அவள் பிள்ளை.

வீரமாணிக்கதேவன்துறை,
மயிலிட்டி.

குடும்பத்தினர்.

(6714)

---

## நினைவு கூருகின்றோம்..
## 29 11. 1993

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி, திருவையாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**அசோக்** (சீவரட்ணம் மேல்சொலமன் இலங்கை ராசன்- கெருடாவில், சாவகச்சேரி-யாழ்.)

1987ஆம் ஆண்டு, தமிழகம் வேதாரணியம் பகுதியில் - இந்திய சுங்க இலாகாவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**கப்டன் றோகான்** (தங்கவடிவேல் மணிவண்ணன் - காட்டுவளவு - வல்வெட்டித்துறை)

யாழ். டேவிற் வீதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் விழுப்புண் அடைந்து சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சங்கரி** (தேவதாஸ் புவனேந்திரன் - புவனேந்திரன் வீதி, அத்தியடி - யாழ்ப்பாணம்)

இதே சமரில் வீரச்சாவெய்திய -

**வசி** (பிரபாகரன் சுதாகரன் - 09/02, 4-ம்குறுக்குத் தெரு - யாழ்ப்பாணம்)

யாழ். சண்டிலிப்பாய் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய -

**குலம்** (மார்க்கண்டு வித்தியானந்தன்-வீரமாணிக்க தேவன்துறை - மயிலிட்டி)

1988ஆம் ஆண்டு இணுவில் மருத்துவமனைக்கு முன்பாக தேசவிரோதிகளால் கட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான இளம்பெண்.

1990ஆம் ஆண்டு பளையில் சிறிலங்கா விமானப் படையினரின் விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1991ஆம் ஆண்டு மட்டு - கொடுவாமடுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**லெப். மாதவன்-முருகமூர்த்தி** (யோகராசா யுகேந்திரன் - தன்னாமுனை - மட்டு)

**லெப். புவிராஜ்** (அருணாசலம் தருமரட்ணம் - மாங்கேணி, வாழைச்சேனை - மட்டு)

**2-ம்லெப். காங்கேயன் - றோயல்கவிசீலன்** (யோசப் எட்வேட் ஜோய் - செங்கலடி - மட்டு)

**தான்தோன்றி - ராஜன்** (சி. அற்புதராசா - கல்லடி - மட்டு)

**துசன்** (ச.பஞ்சாயுதம்- சித்தாண்டி-மட்டக்களப்பு)

1992ஆம் ஆண்டு மட்டு - மயிலவெட்டுவான் பகுதியில் ஆற்றில் மூழ்கியதில் எமைப்பிரிந்த -

**உதயபாரதி** (சிதம்பரப்பிள்ளை கோகுலராஜ் - கல்முனை - அம்பாறை)

பருத்தித்துறை கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மீனவர் ஒருவர் பலி.

கிளாலிக்கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலின் போது கொல்லப்பட்ட மாமுனையைச் சேர்ந்த படகோட்டி.

ஆகியோரை இந் நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8010)

### சிந்தனைக்கு

தான் காணவிரும்புவதை மட்டுமே காணும் துவேஷம், தெளிவாக உள்ளதைகாணாமல் விடுகிறது.

- ஆப்ரிதோமஸ் டிவியர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 29-11-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

த. பெ எண் - 05


## பத்திரிகைகளால் முடியுமா?

சிங்களப் பத்திரிகையாளர்களில் ஒரு சிலர் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும், யுத்தத்தினால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என தற்பொழுது வற்புறுத்தத் தொடங்கியுள்ளனர். இதில் சுதந்திர பத்திரிகையாளர் சங்கத் தலைவர் லூசியன் ராஜ கருணநாயக்க அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் சில முக்கியம் பெறுகின்றன.

அண்மையில், பி. பி. ஸியின் சிங்கள சேவையான சந்தேஷியவிற்கு அவர் வழங்கிய பேட்டியில் ''இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் கட்சிகளிடம் சக்தியில்லை. இது தொடர்பாக பத்திரிகை தொடர்பு சாதனங்கள் கூட முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இந்த நாட்டில் இரு இனங்கள் உண்டெனக் கருதி இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும். எதிர்காலத்தில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பத்திரிகைகளின் பங்கு மிகப் பெரிய அளவினதானது'' என தெரிவித்திருந்தார்.

இதேபோன்றதொரு கருத்தை அண்மையில் இடம் பெற்ற ''போரும் பொது சனத் தொடர்பு சாதனமும்'' என்ற தலைப்பில் இடம் பெற்ற கருத்தரங்கில் பேசும் போதும் அவரால் வற்புறுத்தப்பட்டது. ''சிங்களப் பத்திரிகைகள் மட்டுமல்ல, ஆங்கிலத் தேசிய பத்திரிகைகள் கூட ஒரு பக்கச் சார்பாகவே செயற்படுகின்றன. ஒவ்வொரு பத்திரிகையாளரும் யுத்தம் பற்றிய உண்மையை வெளியிடுவதென எண்ணினால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த அமைதி நிலையை நாட்டில் ஏற்படுத்த முடியும்'' என குறிப்பிட்டிருந்தார்.

திரு. லூசியன் ராஜ கருணநாயக்காவின் இக்கருத்துக்கள் ஓரளவு காலம் கடந்தவையானாலும், முன்னேற்றகரமானவை என்பதும் சிங்கள ஆங்கிலப் பத்திரிகையாளருக்கான சிறப்பானதொரு அறிவுரை என்பதில் சந்தேகம் கொள்ள ஏதுமில்லை, ஏனெனில், இலங்கையில் இவ்வளவு பெருமளவு இரத்தம் சிந்துவதற்கு இப்பத்திரிகைகளும் கணிசமான பங்கை இதுவரையில் ஆற்றியுள்ளமை மறுக்க முடியாதது.

இந்நிலையில், இப்பத்திரிகைகள் இலங்கைக்கு நல்லதைச் செய்யவேண்டுமானால் முதலில், இலங்கை இரு இனங்களைக் கொண்டது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். அதாவது, இலங்கைத் தீவானது பௌத்த

## தேர்தலில் நாம் தோற்றால் அராஜகம்தான் நிலவும்

### ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க

(கொழும்பு)

அடுத்த பொதுத்தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியைப் பெறாது விட்டால் நாட்டில்அராஜகம் நிலவும் என்று ஜனாதிபதி, டி.பி விஜேதுங்ககூறியுள்ளார், அண்மையில் அரசாங்க தரப்பில் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், 1994ஆம்ஆண்டு ஒரு முக்கிய வருடம் ஆகும். இது ஒருதேர்தல் ஆண்டு என்பதை அனைவரும் அறிவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். ஒழுங்காக மக்களைச் சந்திக்கவும் வேண்டும் சிலர் தமது தொகுதிகளுக்கே செல்வது இல்லை. வடமேல் மாகாணம் தென் மாகாணம், மேல் மாகாணம் ஆகிய மாகாணசபைகளில் உருவாக்கப்பட்டிருக்கும் குழப்பத்தைப் பாருங்கள் அதிகாரிகள் பழிவாங்கப்படுகின்றனர். இந்தமூன்று மாகாணசபைகள் பற்றியும் தினமும் முறைப்பாடுகள் வருகின்றன என்றும் தெரிவித்தார்.

## நுவரெலியாவில் பொலிசார் இரவு நேரங்களில் தேடுதல்

(கொழும்பு)

நுவரெலியா மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் தோட்ட நகர மற்றும் கிராமப்புற வீடுகளில் வெளியார் தங்கி இருக்கிறார்களா என்பதை அறிய நுவரெலியாப் பொலிசார் இரவோடு இரவாக தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தகைய தேடுதல் நடவடிக்கைகளின் போது சந்தேகத்திற்கு இடமான வெளியார்களும் தேசிய அடையாள அட்டை இல்லாதோரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

## பாடசாலைக்குகாணி வழங்க தோட்ட நிர்வாகம் மறுப்பு

(கொழும்பு)

தமிழ்ப் பாடசாலை ஒன்றின் விஸ்தரிப்பிற்காக இரண்டு ஏக்கர் காணி வழங்க தோட்ட நிர்வாக அதிகாரி மறுத்துள்ளார். இச்சம்பவம் இரத்தினபுரியில் இடம்பெற்றுள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த அலுப்பொல தோட்டத்தில் இருக்கும் வேவல்வத்தை தமிழ் வித்தியாலயத்திற்கு புதிய கட்டடம் ஒன்றை அமைக்க சப்ரகமுவ மாகாண சபை நான்கு லட்சம் ரூபாவை ஒதுக்கியது. மேற்படி பாடசாலைக்காக தோட்ட நிர்வாகம் முன்பு இரண்டு ஏக்கர் காணியை ஒதுக்கி அது சம்பந்தமாக எழுத்து மூலமும் அறிவித்து இருந்தது. எனினும்தோட்ட நிர்வாகம் தனியார் கம்பனிகளிடம் கைமாறியதைத் தொடர்ந்து காணியை ஒப்படைக்க மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி காணியை அளந்து பொறுப்பேற்பதற்காக சென்ற சட்டபூர்வ அதிகாரியை தமது கடமையை செய்யவிடாது தடுத்து வெளியேற்றிய தோட்ட நிர்வாகத்தின் செயலைக் கண்டித்து தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தோட்டஅதிகாரியின்செயலுக்கு பிரதேசசபையும் கண்டனம் தெரிவித்துள்ளது.

## தோட்டங்களில் அமைதியற்ற நிலை இ. தொ. கா. காரணமல்ல

### - எம். எஸ். செல்லச்சாமி

(கொழும்பு)

தோட்டங்களில் தோன்றியுள்ள அமைதியற்ற நிலைக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எவ் வகையிலும் காரணம் இல்லை என்று இ. தொ. காவின் பொதுச்செயலாளரும் கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான எம்.எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார். இ. தொ. கா. தலைமைக்காரியாலயத்தில் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்திய எம் எஸ் செல்லச்சாமிஅங்கு மேலும் கூறுகையில்,

தோட்டங்களின் நிர்வாகங்கள் கம்பனிகளிடம் கையளிக்கப்பட்டபோது இணக்கம் காணப்பட்ட வாக்குறுதிகள் கடைப்பிடிக் கப்படாததினாலேயே தொழிலாளர் மத்தியில் அமைதியற்ற நிலை உருவாகியுள்ளது

ஆரம்பத்தில் அரசின் கீழ் தோட்டங்கள் இருந்த காலத்தில் நஷ்டம் ஏற்படுவதாகக் கூறப்பட்டதால் தோட்டங்களை கம்பனி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கு இ.தொ.காவும் சம்மதம் தெரிவித்தது.

தனியார் மயத்தின் பின்பாவது தொழிலாளர்கள் வாழ்வில் ஒளிபிறக்கும் என எதிர்பார்த்ததினாலேயே நாம் இந்த ஆதரவை வழங்கினோம். ஆனால் எமது நம்பிக்கை வீண்போவதை நாங்கள் இப்போது கண்கூடாகப்பார்க்கின்றோம். தொழிலாளர்களின் இன்றைய நிலைக்கு அரசும், கம்பனிகளுமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## பிரதேச செயலகங்களுக்கு நிதி ஒதுக்கீடு

(கொழும்புத்துறை)

ஸ்ரீலங்கா அரசின் பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் கீழ் அடுத்த 94ஆம் ஆண்டு ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் பத்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

இதற்கான செயற்திட்டங்களைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் இந்நிதி அவ்வப்பகுதி பிரதேச செயலாளர் பிரிவின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## புதியவகை நெல்லினம் பந்தலகொட கண்டுபிடிப்பு

(கொழும்பு)

குறுகிய காலத்தினுள் அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடிய புதிய இன நெல் ஒன்று வட மத்திய மாகாணத்தில் இருக்கும் பந்தலகொட விவசாய ஆராய்ச்சி பரிசோதனை நிலையத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. 'மஹா செகர்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த வகை நெல்லினம் ஏக்கரொன்றிற்கு சுமார் 160 புசல் விளைச்சலைத் தரக்கூடியது என்று கூறப்படுகிறது பீடைகள் மற்றும் பங்கசுக்களுக்கு தாக்குப் பிடிக்கக்கூடிய இந்த வகை நெல் பயிரிடப்பட்ட 110 நாட்களில் அறுவடை செய்ய முடியும் என்றும் தெரிகிறது. நீர் அபரிமிதமாகக் கிடைக்காத போதும் பெரும் போகம் இருந்தும் சிறுபோகங்களில் இவ்வகை நெல்லினம் பயிரிடப்படக்கூடியது என்றும் கூறப்படுகிறது.

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் பயிலுநர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுக்கவும் சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கைகளைமேற்கொள்ளும் என்று ராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

வாரியப்பொல மத்திய கல்லூரியில் நடைபெற்ற வைபவமொன்றில்உரையாற்றியஉள்நாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சர் மேலும் கூறுகையில்; பயிலுநர் ஆசிரியர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படாது பெற்றுக்கொடுக்க அதிபர்கள்நடவடிக்கைஎடுக்க முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### கருத்தரங்கு

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவைச் சேர்ந்த பாடசாலைகளில் வர்த்தக ஆசிரியர்களாகக் கடமையாற்றிவரும் வர்த்தக ஆசிரியர்களுக்கான வர்த்தக கருத்தரங்குஒன்றுநாளை செவ்வாய்க்கிழமை காலை 8-30மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வர்த்தக ஆசிரிய ஆலோசகர் திரு. ப சுந்தரலிங்கத்தினால் நடாத்தப்படவுள்ளது.

## அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தத்தில் அர்த்தமில்லை

### - பேராசிரியர் செய்ன்மன்

அணு ஆயுதப் பரவலை தடை செய்யும் ஒப்பந்தம் ... என்று அமெரிக்கப் பேராசிரியர் லோறன்ஸ் செய்ன்மன் ... கின்றது எனக் குறிப்பிட்டார்.

## ஐ. ஆர். ஏயுடன் தொடர்பு பிரிட்டன் அரசு ஒப்புதல்

(லண்டன்)

அயர்லாந்துகுடியரசு இராணுவமான ஐ. ஆர். ஏயுடன் பேச்சுவார்த்தைக்காக தொடர்புகொண்டிருப்பதை பிரிட்டன் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டது. பிரிட்டன் அரசு ஐ. ஆர். ஏயுடன் தொடர்பு கொண்டிருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக ஒப்சேவர் பத்திரிகை செய்திகள் வெளியிட்டிருக்கும் இவ்வேளையில்

இதேபோன்றதொரு கருத்தை அண்மையில் இடம் பெற்ற ''போரும் பொது சனத் தொடர்பு சாதனமும்'' என்ற தலைப்பில் இடம் பெற்ற கருத்தரங்கில் பேசும் போதும் அவரால் வற்புறுத்தப்பட்டது. ''சிங்களப் பத்திரிகைகள் மட்டுமல்ல, ஆங்கிலத் தேசிய பத்திரிகைகள் கூட ஒரு பக்கச் சார்பாகவே செயற்படுகின்றன. ஒவ்வொரு பத்திரிகையாளரும் யுத்தம் பற்றிய உண்மையை வெளியிடுவதெனஎண்ணினால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த அமைதி நிலையை நாட்டில் ஏற்படுத்த முடியும்'' என குறிப்பிட்டிருந்தார்.

திரு. லூசியன் ராஜ கருணநாயக்காவின் இக்கருத்துக்கள் ஓரளவு காலம் கடந்தவையானாலும், முன்னேற்றகரமானவை என்பதும் சிங்கள ஆங்கிலப் பத்திரிகையாளருக்கான சிறப்பானதொரு அறிவுரை என்பதில் சந்தேகம் கொள்ள ஏதுமில்லை, ஏனெனில், இலங்கையில் இவ்வளவு பெருமளவு இரத்தம் சிந்துவதற்கு இப்பத்திரிகைகளும் கணிசமான பங்கை இதுவரையில் ஆற்றியுள்ளமை மறுக்க முடியாதது.

இந்நிலையில், இப்பத்திரிகைகள் இலங்கைக்கு நல்லதைச் செய்யவேண்டுமானால் முதலில், இலங்கை இரு இனங்களைக் கொண்டது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். அதாவது, இலங்கைத் தீவானது பௌத்த சிங்களவருக்குத் தத்தம் செய்யப்பட்ட பூமி என்ற பௌத்த சிங்களப் பேரினவாத சிந்தனைப் போக்கில் இருந்து இப்பத்திரிகைகள் விடுபடவேண்டும். தமிழ் மக்களுக்கும் சம உரிமை உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில், சிங்கள அரசியல் கட்சிகள் எவ்வாறு தமது வாக்கு வங்கிகளை நிரப்பவும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவும் இனவாதத்தை வளர்த்தார்களோ அதற்கு இணையாக பத்திரிகைகளும் இனவாதத்தை வளர்த்தே வந்தன. சில இடங்களில் இனப் பிரச்சினை தீர்வு குறித்துப் பேசிய அரசியல்வாதிகளின் வீழ்ச்சிக்கும், சமாதானம் உருவாவதற்கான சூழ்நிலைக்கும் இடையூறாகவே இப்பத்திரிகைகளில் பெரும்பாலானவை செயற்பட்டன.

இன்று கூட எத்தனை வீதமான சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் இலங்கையில் இனப்பிரச்சினை உள்ளதென ஏற்றுக் கொண்டுள்ளன? அவ்வாறு ஏற்றுக் கொள்வதாயின் தமிழரின் விடுதலைப் போரை அவர்கள் ஏன் இன்னும் பயங்கரவாதம் என எழுத வேண்டும்? ஆசிரியர் தலையங்கங்களிலும், செய்திகளிலும் விடுதலைப் போராட்டம் என ஏன் எழுதுவதில்லை? இதற்கு சிங்கள ஆங்கில பத்திரிகைகளின் சிந்தனைப் போக்கு மாறாததே காரணமாகும். இதற்கு அவை பேரினவாதத்தின் பிடியில் இருந்து விடுபட வேண்டும்.

பத்திரிகைகள் இனியாவது அவ்வாறு செயற்படாது போனால் அரசியற்கட்சிகளால் மட்டுமல்ல பத்திரிகைகளால் கூட எதிர்காலத்தில் எதையும் சாதிக்க முடியாது போய்விடும். அத்தோடு அரசியல் வாதிகளுக்கும் பத்திரிகையாளர்களுக்கும்இடையில் வேறுபாடுஇல்லாது போகும். அதாவது அரசியல்வாதிகள் ஆட்சி அதிகாரத்தைப் கைப்பற்ற இனவாதத்தை பேசி நாட்டைக் குட்டிச்சுவராக்கியது போன்று பத்திரிகைகள் விற்பனவிற்காக இனவாதத்தைப் பேசிசிங்களமக்களை மீளமுடியாத படுகுழியில் தள்ளி விட்டவர்களாகவே இருப்பார்கள்.

இந்நிலையில், இனியாவது சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் யுத்தம் தொடர்பான செய்திகளில் அரசாங்கத்தின் ஊது குழலாகவும், யுத்தத்தின் வழிகாட்டிகளாகவும் இருப்பதைத் தவிர்க்க வேண்டும் அத்தோடு யுத்தத்தின் உண்மை நிலையை வெளியிடுவார்களேயானால் லூசியன் ராஜகருணநாயக்கா கூறுவது போன்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த அமைதி நிலையை ஏற்படுத்த உதவ முடியும். ஆனால், இது எத்துணை சாத்தியமானது? இதற்கு எத்தனை ஆங்கில, சிங்களப் பத்திரிகையாளர்கள் தயாராகவுள்ளனர்? என்பதே தற்பொழுதுள்ள கேள்விகள்.

---

றுள்ளது: இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த அலுப்பொல தோட்டத்தில் இருக்கும் வேவல்வத்தை தமிழ் வித்தியாலயத்திற்கு புதிய கட்டடம் ஒன்றை அமைக்க சப்ரகமுவ மாகாண சபை நான்கு லட்சம் ரூபாவை ஒதுக்கியது. மேற்படி பாடசாலைக்காக தோட்ட நிர்வாகம் முன்பு இரண்டு ஏக்கர் காணியை ஒதுக்கி அது சம்பந்தமாக காணியை அளந்து பொறுப்பேற்பதற்காக சென்ற சட்டபூர்வ அதிகாரியை தமது கடமையை செய்யவிடாது தடுத்து வெளியேற்றிய தோட்ட நிர்வாகத்தின் செயலைக் கண்டித்து தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தோட்டஅதிகாரியின்செயலுக்கு பிரதேசசபையும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதற்கான செயற்திட்டங்களைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் இந்நிதி அவ்வப்பகுதி பிரதேச செயலாளர் பிரிவின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

றுக்கொடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கைகளைமேற்கொள்ளும் என்று ராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

வாரியப்பொல மத்திய கல்லூரியில் நடைபெற்ற வைபவமொன்றில்உரையாற்றியஉள்நாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சர் மேலும் கூறுகையில்; பயிலுநர் ஆசிரியர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படாது பெற்றுக்கொடுக்க

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவைச் சேர்ந்த பாடசாலைகளில் வர்த்தக ஆசிரியர்களாகக் கடமையாற்றிவரும் வர்த்தக ஆசிரியர்களுக்கான வர்த்தக கருத்தரங்குஒன்றுநாளை செவ்வாய்க்கிழமை காலை 8-30மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வர்த்தக ஆசிரிய ஆலோசகர் திரு. ப சுந்தரலிங்கத்தினால் நடாத்தப்படவுள்ளது.

---

# அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தத்தில் அர்த்தமில்லை

**- பேராசிரியர் செய்ன்மன்**

அணு ஆயுதப் பரவலை தடை செய்யும் ஒப்பந்தம் 1968ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட போது ஐந்து நாடுகள் மட்டுமே அணு ஆயுதங்களைக் கொண்டிருந்தன. ஆனால் இப்போது பல நாடுகள் அணு ஆயுதங்களை வைத்திருக்கின்றன. இந்த நாடுகள் பல்வேறு காரணங்களுக்காக தாம் அவற்றை வைத்திருப்பதனை ஒப்புக் கொள்ள பின்வாங்குகின்றன என்று அமெரிக்கப் பேராசிரியர் லோறன்ஸ் செய்ன்மன் தெரிவித்தார். அணு ஆயுதப் பரவல் தடுப்பு செயல்திட்டம் என்னும் அமைப்பினால் கொழும்பு மரியட் ஹோட்டலில் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில்கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்; இத்தகைய நாடுகளின் போக்கு அணு ஆயுதப் பரவலை தடுப்பதற்கு பெரும் சவாலாக விளங்குகின்றது எனக் குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் உரையாற்றிய ரஷ்யப் பிரதிநிதி தமதுரையின் போது அணு ஆயுதப் போர் தொடர்பான அச்சம் இப்போது ஓரளவுக்கு நீங்கியுள்ளது. எனினும், தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும் அணு ஆயுதப் பலமுள்ள நாடுகளாகும். இந்நாடுகளுக்கு இடையிலான சச்சரவுகளும், இப் பிராந்தியத்தில் பல விடுதலை போராட்டக் குழுக்கள் இருப்பதும் அச்சத்தை ஏற்படுத்துகின்றன. எனக் குறிப்பிட்டார்.

## பாரதீய ஜனதாவின் ஆதரவை அ.தி.மு.க. நாடவேண்டும்

**பாலசுப்பிரமணியம் கருத்து**

(சென்னை)

அரசியலமைப்பைத்திருத்துவதற்கு மக்களவையில் பாரதீய ஜனதாக்கட்சியின் ஆதரவை அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம்கோரவேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிப் பிரமுகரும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; தமிழ் நாட்டில் அரசுப் பணிகளில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டைச் செய்வதற்கு இந்திய அரசியலமைப்பை திருத்த வேண்டும் எனவும் இதற்கு காங்கிரஸ் (ஐ) தேசிய முன்னணி, மற்றும் இடதுசாரிக் கட்சிகள் ஆதரவளிக்கும் எனவும் தெரிவித்தார்.

69 சதவிகித இடஒதுக்கீடு தொடரவேண்டும் என்று அண்மையில் சென்னையில் நடைபெற்ற அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டிய அவர் அது தொடர்பாக கருத்து வெளியிடுகையில், அரசியல் சாசனத்தின் 315 சரத்திற்கு இணங்க இத்தகைய சட்டமொன்றை இயற்ற முடியுமா என்பது குறித்து மாநில அரசு நிபுணர்களுடன் ஆலோசிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## 20,000 வெளிநாட்டவருக்கு வட கொரியாவில் தொழில்

வடகொரியா தொழில் தேர்ச்சி பெறாத 20,000 வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க முன்வந்துள்ளது.

இத்தொழிலாளர்கள் இரண்டு வருட காலம் வட கொரியாவில் தங்கியிருந்து தொழில் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்

வடகொரியா தொழில் தேர்ச்சிபெறாத சாதாரண தொழிலாளர்களை அனுமதிப்பது இதுதான் முதல் தடவையாகும்.

60,000 வெளிநாட்டுத் தொழிலாளர்கள் வடகொரியாவில் சட்டவிரோதமாக குடியேறி தொழில் செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாலத்தீனியஇஸ்ரேல்பேச்சு முட்டுக்கட்டை நிலையில்

**- யாசிர் அரபாத்**

காஸாப் பகுதியிலிருந்தும், ஜெரிக்கோ நகரிலிருந்தும்இஸ்ரேலிய துருப்புக்களை விலக்கிக் கொள்வது தொடர்பாக நடைபெற்ற பேச்சுக்களில் தேக்கநிலை ஏற்பட்டிருப்பதாக பாலத்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அரபாத் கூறியுள்ளார்.

இந்தப் பகுதிகளிலிருந்து படைகளை விலக்கிக் கொள்ளாமல் படைகளை நிலைநிறுத்தி வைத்திருக்கவே இஸ்ரேல் வலியுறுத்தி வருவதாலே இத் தேக்கநிலை ஏற்பட்டிருப்பதாக யாசிர் அரபாத் ஸ்டாக்ஹோமில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போது குறிப்பிட்டார்

பாலத்தீனியவிடுதலை இயக்கத்தின் தலைமைப்பேச்சாளர் நபிர்ஷா உடன் பேசிய பிறகே இதனைத் தெரிவிப்பதாகவும் அவர் சொன்னார்

அண்மையில் செய்துகொள்ளப்பட்ட பாலத்தீனிய இஸ்ரேலிய உடன்பாட்டின்படி அடுத்த 13-ம் திகதிக்கு முன்பாக இஸ்ரேல் தனது துருப்புக்களை விலக்கிக் கொள்ள வேண்டும் என்பது தெரிந்ததே

எனினும் பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டைநிலை ஏதுமில்லை எனக்கூறியுள்ள இஸ்ரேலிய பிரதமரின் அலுவலக அறிக்கையில் மேலும் பாதுகாப்பு தொடர்பான இருதாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டாலேயே துருப்புகள் விலக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா வெற்றி

கலகத்தா ஈடன்கார்டின் வைரவிழா வெற்றிக் கிண்ணத்திற்கான இறுதி ஆட்டத்தில் இந்தியா மேற்கிந்திய தீவுகள் அணியை 102 ஓட்டங்களினால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7விக்கற்றுகள் நஷ்டத்திற்கு 225 ஓட்டங்களைப் பெற்றது இதற்குப் பதிலளித்துஆடியமேற்கிந்திய அணி 40. 1 ஓவர்களில் சகல விக்கட்டுக் களையும் இழந்து 123 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

## ஐ. ஆர். ஏயுடன் தொடர்பு பிரிட்டன் அரசு ஒப்புதல்

(லண்டன்)

அயர்லாந்துகுடியரசு இராணுவமான ஐ. ஆர். ஏயுடன் பேச்சுவார்த்தைக்காக தொடர்புகொண்டிருப்பதை பிரிட்டன் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசின் அயர்லாந்து அலுவலகம் நேற்று முன்தினம் இது பற்றி அறிக்கை ஒன்றை வெளியிட்டது. பிரிட்டன் அரசு ஐ. ஆர். ஏயுடன் தொடர்பு கொண்டிருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக ஒப்சேவர் பத்திரிகை செய்திகள் வெளியிட்டிருக்கும் இவ் வேளையில் பிரிட்டன் அரசு இவ் அறிக்கையை வெளியிட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

## அதிபர் பதவி விலகினால் பிரதமர் பதவி துறக்க தயார்

**- கேக் மத்தியார் அறிவிப்பு**

(காபூல்)

அதிபர் புர்ஹானுத்தீன் ரபானி பதவி விலகத் தயார் என்றால் நாட்டில் அமைதி நிலையை ஏற்படுத்தத் தவறியமைக்கான பொறுப்பை ஏற்று பிரதமர் பதவியிலிருந்து தானும் விலகத்தயாராக இருப்பதாகஆப்கானிஸ்தான் பிரதமர் குல்புதின் கேக் மத்தியார் கூறியுள்ளார்

ஆப்கானிஸ்தானில் முன்னாள் கெரில்லாக்குழுத்தலைவரும் பாதுகாப்பு அமைச்சருமான அகமத்சா மசூத் தலைமையிலான குழுவினருக்கும் கேக் மத்தியார் தலைமையிலான குழுவினருக்குமிடையே மோதல்கள் நடைபெற்றுவருவது தெரிந்ததே.

## 103 வயதில் கொலை

103 வயது வரை வாழ்ந்த இத்தாலியர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் மில்வான்கி என்னுமிடத்தில் வாழ்ந்த உலிசே எடரா என்பவரே கொல்லப்பட்டவராவார். இவரது படுகொலை தொடர்பாக பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## ரயில் பாதை பூர்த்தியாகா

பிரிட்டனுக்கும் பிரான்சிற்கும் இடையிலான கடல்வழி கீழான குழாய் ரயில்பாதைத் திட்டம் 2002ஆம் ஆண்டிலும் நிறைவேறமாட்டாது எனக் கூறப்படுகிறது இதனால் ஏற்படும் தாமதம் பிரிட்டனுக்கு ஒரு சங்கடமான நிலையை தோற்றுவித்துள்ளது.

# உள்நாட்டுப் போர் வெடிக்கும் அபாய நிலையில் தென்னாபிரிக்கா!

## இராணுவத்தின் லீவுகள்யாவும் ரத்து

(ஜோகனர்பேர்க்)

உள்நாட்டுப்போர் ஒன்றை சந்திக்கும் ஆபத்தை தென்னாபிரிக்கா எதிர்நோக்கி வருகிறது. சகலவிதத்திலும் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்துவது என வெள்ளையின தீவிரவாதிகள் தீர்மானித்ததை தொடர்ந்து இராணுவத்தினரின் விடுமுறைகள அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

வெள்ளையின வலதுசாரி குழுவினர் இன்காத்தா குழுவினருடன் இராணுவ ரீதியான ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளனர். கறுப்பின பிரதான எதிர்க்கட்சியான இன்காத்தா சூலு மக்களுக்கென தனிநாடு கோரியுள்ளது தீவிர வலதுசாரி ஆபிரிக்க குழுவினரும் இன்காத்தா குழுவினருடன் இணைந்துள்ளனர். இவர்கள் ஒரு காலத்தில் எதிரிகளாக இருந்தவர்கள் சில நகரின் பிரதான வீதிகளில் ஆபிரிக்க தேசியக் காங்கிரசின் நெல்சன் மண்டேலாவை எதிர்த்து இன்காத்தாவிற்கு ஆதரவு தெரிவித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

# கல்முனைப் பகுதியில் இரவுநேர குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

கல்முனை, பள்ளிக்குடா ஆகிய பகுதிகளை அண்டிய இடங்கள் மீது சிறிலங்கா விமானப்படையினர்குண்டுத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று இரவு 9-00 மணியளவில் மேற்படி பகுதிகள் மீது மூன்றுக்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன.

இத்தாக்குதலின் போது ஏற்பட்ட சேதங்கள் குறித்த விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

## நக்சலைட்டுகள் வைத்த

# நிலக்கண்ணி வெடிக்கு 10 இந்திய பொலிசார் பலி

(டில்லி)

மத்திய பிரதேசத்தில் நக்சலைட்டுக்களின் நிலக்கண்ணி வெடியில் சிக்கி 10 இந்திய மத்திய ரிசேர்வ் பொலிஸ் படையினர் பலியாகினர். நேற்றுக் காலை 10 மணியளவில் இந்த ரிசேர்வ் பொலிஸ் படையினர் ரோந்து சென்றபோது கண்ணி வெடி வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் மாநிலப் பொலிஸார் ஒருவரும் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

# சட்டசபைத் தேர்தலில் பா.ஜனதா பின்னடைவு

(டில்லி)

இந்தியாவில் நடைபெற்ற ஐந்து சட்டசபைகளுக்கான தேர்தலில், நான்கின் முடிவுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன இத் தேர்தலில் பாரதீய ஜனதா கணிசமான பின்னடைவைச் சந்தித்துள்ளது.

இதில் இமாலயப் பிரதேசத்தில் இந்திராகாங்கிரஸ் அறுதிப் பெரும்பான்மையை பெற்று வெற்றியீட்டியுள்ளது.

டில்லிசட்டசபைக்கானதேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று வெற்றியீட்டியுள்ளது,

ராஜஸ்தான் மாநிலத்தில் தனிப்பெரும் கட்சியாக பாரதீய ஜனதாக்கட்சி வெற்றியீட்டிய போதிலும் அறுதிப் பெரும்பான்மை பெறத் தவறியுள்ளது

உத்தரப்பிரதேசத்தில் பாரதீய ஜனதாக் கட்சிக்கும் சமாஜவாதிஜனதா, பகுஜன் சமாஜ்வாதிக் கட்சிக் கூட்டணிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்திய பிரதேசத்திற்கான முடிவுகள் நள்ளிரவு வரை வெளிவரவில்லை.

## இந்தியாவில் இடம்பெற்ற சட்டசபைத் தேர்தல் முடிவுகள்

| | உத்தர பிரதேசம் | ராஜஸ்தான் | இமாலய பிரதேசம் | டில்லி | மத்திய பிரதேசம் |
|---|---|---|---|---|---|
| மொத்த இடங்கள் | 425 | 200 | 68 | 70 | - |
| தேர்தல் இடம்பெற்றவை | 422 | 199 | 68 | 70 | - |
| வெளிவந்த முடிவுகள் | 147 | 199 | 65 | 69 | - |
| பாரதீய ஜனதா | 57 | 93 | 08 | 48 | - |
| இந்திரா காங்கிரஸ் | 14 | 77 | 50 | 14 | - |
| ஜனதா தளம் | 07 | 06 | - | 04 | - |
| சமாஜவாதி ஜனதா | 30 | - | - | - | - |
| பகுஜன் சமாஜ் | 33 | - | - | - | - |
| இடதுசாரிகள் | 01 | 01 | - | - | - |
| சுயேட்சையும்/ஏனையவையும். | 05 | 22 | 07 | 03 | - |

## மலத்தியோன்

பனை செய்து அப்பணத்தின் மூலம் கொழும்பில் மீண்டும் பீப்பாக்களை கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால் அவ் வெற்று பீப்பாககள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட போதும் அதற்குரிய பணம் மிக அண்மைக் காலத்திலேயே சம்பந்தப்பட்ட பிரிவுக்கு அனுப்பப்பட்டது. இதனால் மார்ச் மாதத்திற்கு பின்னர் தேவையான மலத்தியோன் பவுடர்களை யாழ். குடாநாட்டுக்கு கொண்டு வரமுடியவில்லை என சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்,

தற்போது பணம் வழங்கப்பட்டாலும் சீரான கப்பல் போக்குவரத்து இன்மையினால் எதிர்வரும் மார்ச் மாதத்தின் பின்னரே மலத்தியோன் பவுடர் இங்கு கொண்டு வரமுடியும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# குளத்தில் மூழ்கி இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிவன் கோவிலடி பரவைக்குளத்தில் மூழ்கியதில் அத்தியடியைச் சேர்ந்த குகானந்தன் (குகன்) (வயது 24) என்பவர் மரணமானார்

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; இளைஞர்கள் சிலர் சேர்ந்து பரவைக்குளத்தில் ஒருகரையில் இருந்து மறுகரைக்கு நீந்திச் செல்ல முடியுமா என பந்தயம் பேசியதாகவும்அப்போது இறந்தவர் தான் நீந்திக்கடப்பதாக கூறி நீந்திக்கொண்டு நடுப்பகுதியை தாண்டும் போது நீரில் மூழ்கிவிட்டதாகவும் தெரியவருகின்றது. மேற்படி நபரின் உடலை தேடும் பணியில் பலர் ஈடுபட்டுள்ளனர். செய்தி எழுதும்வரை உடல் மீட்கப்படவில்லை. (சி)

# மாவீரர் கண்ட இன்பநாள்கள் என்றோ ஒருநாள் மலரும்

## முல்லைமாவட்ட சிறப்புத் தளபதி முல்லைச்செல்வன்

முல்லைமாவட்டம்முள்ளியவளை மாவீரர் கலையரங்கில் நேற்றுமுன்தினம் இரவு மாவீரர் நாள் பொதுக்கூட்டமும், கலை நிகழ்வுகளும் திரு பரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி மயூரி, கலை பண்பாட்டு பொறுப்பாளர் திரு சங்கர், மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இளமாறன், மாவட்ட சிறப்புத் தளபதி திரு. முல்லைச் செல்வன் (சாலமன்) ஆகியோர் உரை நிகழ்த்தினர்

சிறப்புத் தளபதி திரு. முல்லைச் செல்வன் தனதுரையில் இந்த தியாகிகளின் வீரத்தால் இன்று எமது மண் சிவந்துள்ளது. அந்த இரத்தம் காயாத சோகமுகங்களோடு இங்கே வாழும் இம் மாவீரர்களின் பெற்றோர்கள் அடுத்த பிள்ளைகளையும் ஒரு வரலாற்று விடிவிற்காய் போராட்டத்தில் இணைத்துள்ளனர். அந்த ஒவ்வொரு தியாகிகளும் வீழ்கின்ற போதெல்லாம் தமது கனவுகளை எம்மிடம் விட்டுச் செல்கின்றனர். அவர்கள் கண்ட அந்த இன்ப நாள் என்றோ ஒருநாள் மலரும் அந்த மாவீரர்களின் கனவு நனவாகும் என குறிப்பிட்டார்.

தொடர்ந்து மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பேசுகையில்; ஒரு ... சிங்கள ஏகாதிபத்திய அரசு தமது நடவடிக்கை புலிகளுக்கெதிரானதென்று கூறிவருகின்றது. ஆனால் அது தமிழ் மக்களுக்கெதிரானது என்று இன்னமும் புரிந்துகொள்ளவில்லை எனவும் கூறினார்.

இறுதியில் புனிதபூமி சிறுவர்களின் பாராட்டைப் பெற்ற கலை நிகழ்வுகளும், வேறு பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன

## கலந்துரையாடல்

வீடியோ படப்பிடிப்பாளர்கள், வீடியோ நாடா விநியோகஸ்தர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு அரசியல்துறை, யாழ். மாவட்டச் செயலகத்தில் (கோண்டாவில்) நடைபெறவுள்ளது. எனவே அனைத்து வீடியோப் படப்பிடிப்பாளர்களையும், வீடியோ நாடா விநியோகஸ்தர்களையும் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கேட்டுள்ளார்.


நாளை

மீண்டும் சாவகச்சேரி

தெய்வேந்திராவில்

அகன்ற வெண்திரையில்

தமிழோசையுடன்

THE SUPER COPS

பி. ப. 2-00 4-30 காட்சிகளாக

காண்பிக்கப்படும்

(6720)



அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம்

மாதாந்த இசை நிகழ்ச்சி

இந்திரா நகையகம்(சஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.)ஆதரவில்

இடம் மன்றக் கலாமண்டபம்

சட்டநாதர்வீதி, நல்லூர்

காலம்: 30-11-1993 செவ்வாய் மாலை 5 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 5.00—5.30 வீணை இசை

செல்வி உதயந்தி வாமதேவன் ) வீணை


## யாழ். குடாநாடு முழுவதும்

# பெருமழை, வெள்ளம் குடியிருப்புகள் மூழ்கின

(குருநகர்)

நேற்றுமுன்தினம்முழுவதும் பெய்த பெருமழையால்யாழ் குடாநாட்டின் சில கிராமங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது

கோண்டாவில் கிழக்கு ... போன்ற இடங்கள் வெள்ளக் காடாகக் காட்சி அளிக்கின்றன.

மேலும் மூளாய், தொல்புரம், சுழிபுரம், வட்டுக் கோட்டை மற்றும் பல தாழ்வு நிலங்களில் குடியிரு


கண்ணீர் அஞ்சலி

25-11-93இல் முல்லைத்தீவில் மரணமடைந்த

உயர்திரு

ப. திருநாவுக்கரசு

அவர்களுக்கு

எமது கண்ணீர் அஞ்சலி

தமிழோசையுடன்
# THE SUPER COPS
பி, ப. 2-00 4-30 காட்சிகளாக
காண்பிக்கப்படும்

(6720)

---

அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம்
## மாதாந்த இசை நிகழ்ச்சி
இந்திரா நகையகம் (கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.) ஆதரவில்
இடம் மன்றக் கலாமண்டபம்
சட்டநாதர்வீதி, நல்லூர்
காலம்: 30-11-1993 செவ்வாய் மாலை 5 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 5.00—5.30 வீணை இசை
செல்வி உதயந்தி வாமதேவன் )
செல்வி சுதர்ஷினி காசிவிசுவநாதன் ) வீணை
திரு. எஸ். துரைராஜா — மிருதங்கம்,
திரு அ. செல்வரெட்ணம் — கடம்

5.30—6.30 பாட்டு
செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம்- பாட்டு
திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
திரு. கே கண்ணதாசன் - மிருதங்கம்

6.30—7 00 பல்லியம்
செல்வி உதயந்தி வாமதேவன் அவர்கள் தயாரித்து வழங்குவார்

7.00—7.30 மங்கள விளக்கேற்றல்
1. திரு. கே. எஸ். விபுலானந்தன் அவர்கள் வர்த்தகர் (இந்திரா நகையகம்) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
2. திரு நாராயணசாமி தர்மராசா அவர்கள் வர்த்தகர் சுகுணாஸ் பிடவை மாளிகை, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

தலைமையுரை: வாகீசவாரிதி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்கள்.
பிரதமவிருந்தினர் உரை: திரு. சுப்பிரமணியம் சோமசுந்தரம் அவர்கள்
பிரபல வர்த்தகரும் சமூகசேவையாளரும் சுன்னாகம்

7.30—8.30 சிறப்பு நிகழ்ச்சி: நாட்டியக்கலாகேந்திரா மாணவிகள் வழங்கும்
பரதநாட்டியம்
நட்டுவாங்கம்: திருமதி கிருஷாந்தி ரவீந்திரா
பாட்டு: செல்வி சாரதா சச்சிதானந்தம்
மிருதங்கம்: எஸ் மகேந்திரன்
நடனம்: செல்வி சாந்தினி நடராஜா
(நாட்டியக்கலைமணி யாழ் பல்கலைக்கழக நுண்கலைபீடம்)
செல்வி ஜனீத்திரா சோமசூரியசிங்கம்
வயலின்: செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம்

14-வதுஆண்டு இசை விழா
தொடர்ந்து (15) பதினைந்து தினங்கள்

குறிப்பு: இளங்கலைஞர் மன்ற 14-வது ஆண்டு இசை விழா 6-2-94—20-2-94 வரை பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. இசைவிழாவில் கலந்து நிகழ்ச்சிகள் வழங்க விரும்பும் இளங்கலைஞர்களிடமிருந்து வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல் என்பவற்றில் தனி குழு நிகழ்ச்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்கள்தகுதியை உறுதி செய்து 30-12-93 திகதிக்கு முன்னர் தலைவர் இளங்கலைஞர் மன்றம் சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இசை ஆர்வலர்கள் அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

மேற்படி
மன்றத்தினர்

(6716)

---

யுமா என பந்தயம் பேசிய கதாகவும்அப்போது இறந்தவர் தான் நீந்திக்கடப்பதாக கூறி நீந்திக்கொண்டு நடுப்பகுதியை தாண்டும் போது நீரில் மூழ்கிவிட்டதாகவும் தெரியவருகின்றது. மேற்படி நபரின் உடலை தேடும் பணியில் பலர் ஈடுபட்டுள்ளனர். செய்தி எழுதும்வரை உடல் மீட்கப்படவில்லை. (சி)

வளை மாவீரர் கலையரங்கில் நேற்றுமுன்தினம் இரவு மாவீரர் நாள் பொதுக்கூட்டமும், கலை நிகழ்வுகளும் திரு பரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி மயூரி, கலை பண்பாட்டு பொறுப்பாளர் திரு சங்கர், மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு.

புத் தளபதி திரு. முல்லைச் செல்வன் (சாலமன்) ஆகியோர் உரை நிகழ்த்தினர்

சிறப்புத் தளபதி திரு. முல்லைச் செல்வன் தனதுரையில் இந்த தியாகிகளின் வீரத்தால் இன்று எமது மண் சிவந்துள்ளது. அந்த இரத்தம் காயாத சோகமுகங்களோடு இங்கே வாழும் இம் மாவீரர்களின் பெற்றோர்கள் அடுத்த பிள்ளைகளையும் ஒரு வரலாற்று விடிவிற்காய் போராட்டத்தில் இணைத்துள்ளனர். அந்த ஒவ்வொரு தியாகிகளும் வீழ்கின்ற போதெல்லாம் தமது கனவுகளை எம்மிடம் விட்டுச் செல்கின்றனர். அவர்கள் கண்ட அந்த இன்ப நாள் என்றோ ஒருநாள் மலரும் அந்த மாவீரர்களின் கனவு நனவாகும் என குறிப்பிட்டார்.

தொடர்ந்து மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பேசுகையில்; ஒரு முதல் வேங்கை மடிந்த இன்நாளிலே இதன் பின்னால் இன்றும் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட வேங்கைகள் தம்முயிரை பல வடிவங்களில் அர்ப்பணித்துள்ளனர். இந்த மாவீரர்கள் காணும் கனவுகளை நனவாக்கிக்கொண்டே வருகின்றனர். 12 நாட்கள் உருகி உருகி தியாகி திலீபன் கூறிய அந்த வார்த்தையை 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்' என்று. இன்று தந்தையும் மகனும் களமாடும் செயல் இப் பூமியிலே உதயமாகியுள்ளது.

மண்கிண்டியிலும், பூநகரியிலும் எமது தந்தையார்கள் (துணைப்படை வீரர்) சாதனை படைத்துள்ளனர்.

சிங்கள ஏகாதிபத்திய அரசு தமது நடவடிக்கை புலிகளுக்கெதிரானதென்று கூறிவருகின்றது. ஆனால் அது தமிழ் மக்களுக்கெதிரானது என்று இன்னமும் புரிந்துகொள்ளவில்லை எனவும் கூறினார்.

இறுதியில் புனிதபூமி சிறுவர்களின் பாராட்டைப் பெற்ற கலை நிகழ்வுகளும், வேறு பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன

அரசியல்துறை, யாழ். மாவட்டச் செயலகத்தில் (கோண்டாவில்) நடைபெறவுள்ளது. எனவே அனைத்து வீடியோப் படப்பிடிப்பாளர்களையும், வீடியோ நாடா விநியோகஸ்தர்களையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

---

யாழ். குடாநாடு முழுவதும்
# பெருமழை, வெள்ளம் குடியிருப்புகள் மூழ்கின

(குருநகர்)

நேற்றுமுன்தினம்முழுவதும் பெய்த பெருமழையால்யாழ் குடாநாட்டின் சில கிராமங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது

கோண்டாவில் கிழக்கு பகுதியில் மக்கள் குடியிருப்புகளில் வெள்ளம் நிரம்பியதைத் தொடர்ந்து சில குடும்பங்கள் இடம்பெயர்ந்தன.

சுதுமலை அம்மன் கோவிலடி, அனைக்கோட்டை, நவாலி அங்கையான் போன்ற இடங்கள் வெள்ளக் காடாகக் காட்சி அளிக்கின்றன.

மேலும் மூளாய், தொல்புரம், சுழிபுரம், வட்டுக்கோட்டை மற்றும் பல தாழ்வு நிலங்களில் குடியிருந்த மக்கள், உறவினர் வீடுகளிலும், பொது இடங்களான பாடசாலைகள் போன்றவற்றிலும் தங்கியுள்ளனர். அத்தோடு சில உள்ளூர் வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சில இடங்களில் பாதைகள் வெட்டப்பட்டு வெள்ளம் ஓட்டும் வேலைகளும் இடம்பெறுகின்றன.

## மக்கள்

கப்படுகிறது.

காலை 9 மணிக்கு யாகப்பர் ஆலய முன் இருந்து ஆரம்பமாகும் இவ் ஊர்வலம் பிரதான வீதி, 1-ம் குறுக்குவீதி, ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி, இராசாவின் தோட்ட வீதி, றக்கா வீதி, கோவில் வீதியூடாக சர்வதேச செஞ்சிலுவை சங்க யாழ். வதிவிட பணிமனை சென்று அங்கு மகஜர் கையளிக்கப்படும். தொடர்ந்து அங்கிருந்து கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி செயலகத்தில் அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்படும். (21)

## பொன்னாலை

ஏற்சனவே வெளியேறியிருந்ததினால் உயிர்ச் சேதங்கள் எதுவும் இன்றி தப்பித்துக் கொண்டனர்.

மேலும் இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்று சுமார் 25நிமிடங்களின்பின் மீண்டும் அப்பகுதிக்கு வந்த மேற்படி, புக்காரா விமானம் அராலி வட்டுக்கோட்டை, கொத்தத்துறை ஆகிய பகுதி வான் பரப்பிலும் சுற்றி வட்டமிட்டுச் சென்றது.

இத் தாக்குதல் சம்பவம் நடைபெறுவதற்கு முன் மாலை 5.15 மணியளவில் பொன்னாலை, மூளாய், தொல்புரம், சுழிபுரம் பகுதிகளினூடாக வான்படையினரின் உலங்கு வானூர்தி ஒன்று காரைநகர் பக்கமாக சென்றதை அவதானிக்க முடிந்தது. (41)

## கருத்தரங்கு

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப்பிரிவில் உள்ள பாடசாலைகளில் கடமைபுரியும் வர்த்தக ஆசிரியர்களுக்கான சேவைக்கால வர்த்தகக் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வர்த்தக ஆசிரிய ஆலோசகர் திரு.ப. சுந்தரலிங்கம் அவர்களால் நடாத்தப்படவுள்ளது.

## தொழிலாளர்

நடைபெற்ற பேச்சுக்கள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டது.

தோட்டத் தொழிலாளர் பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்திற்கு தெளிவு படுத்தப்பட்டும், அரசின் தலைமைப்பீடம் காட்டும் அசிரத்தை மிகுந்த கவலை தருகிறது

ஐக்கிய தேசியக் கட்சி தொடர்பாக வைத்திருந்த எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் சிதைந்து விட்டன. எனவே நாம் தோட்டத் தொழிலாளர் நன்மை கருதி சிலநடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளோம்.

காணி விடயத்தில் தோட்டத் தொழிலாளர்கள் சந்தேகக்கண்கொண்டே பார்க்கப்படுகின்றனர். மேலும் எனது அமைச்சின் கீழ் இயங்கி வந்த தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரியை மூடிவிட அரசு முடிவு செய்துள்ளது என அவர் தெரிவித்தார்.

## இராணுவத்

முதலில் ஜனகபுர முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர் இதில் 50க்கும்மேல் அரசபடைகள் பலியாகினர். இதற்கு பதிலாக படைகள் ஒக்டோபரில் கிளாலிப்பகுதியில் நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர். இதனை தெற்கில் உள்ள பலர் தோல்விஎன்றே கருதுகின்றனர். இதிலும் பல படையினர் மரணமாகினர்.

வடபகுதியில் முப்படை நடவடிக்கைக்கு ஒரு பொறுப்பதிகாரி நியமிக்கப்படுவது புதிய கருத்தாகும் முன்பு இதுபற்றி கூறப்பட்டவேளையில் ஒன்றை சொல்வது பின் அதை அடியோடு மாற்றுவது என்ற போக்கில் அரசு முன்னுக்குப்பின் முரணாக நடந்த பல சம்பவங்கள் உண்டு ஒருங்கிணைப்பாளர் விடயத்தில் அரசு பல்டி அடிப்பதே வழக்கமாக்கி விட்டது அடிமேல் அடிவாங்கும் அரச படைகளின் நிலையை புதிய ஒருங்கிணைப்பாளர் ஜெரிடி சில்வா மாற்றிடுவாரா என்பதெல்லாம் பொறுத்திருந்து பார்க்கவேண்டியவை எனவும் பி, பி. ஸி. குறிப்பிட்டது.

---

## கண்ணீர் அஞ்சலி

25-11-93இல் முல்லைத்தீவில் மரணமடைந்த
உயர்திரு
### ப. திருநாவுக்கரசு
அவர்களுக்கு
### எமது கண்ணீர் அஞ்சலி

தமது தந்தையை இழந்து நிற்கும் திரு. தி. சபாரத்தினம் (கூ.அ உ.. ஆணையாளர் பனை, தென்னை வளம்) அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அங்கத்தவர்கள், நெறியாளர்கள்,
பணியாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள்.
கொடிகாமம் - பனை தென்னை வள
அபிவிருத்தி கூ. சங்கம்.

(6718)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்வரத்தினம் நாகராசா

அளவெட்டி தெற்கு செபஸ்ரியார்கோவிலடியைச் சேர்ந்த திருமதி செல்வரத்தினம் நாகராசா 28 - 11 - 93 அன்று காலமானார். இவர் நாகராசாவின் அருமைமனைவியும், தருமராசா, தில்லைராசா, லோகராசா (பிரான்ஸ்), ராகினி ஆகியோரின் அன்புத்தாயாரும், வசந்தமலர், புஸ்பராணி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், தர்மினி, வசந்தினியின் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் ஈமைச்சடங்குகள் இன்று (29 - 11 - 93) இவரின் இல்லத்தில் காலை 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி தெற்கு பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அளவெட்டி தெற்கு,
மாகியப்பிட்டி

தகவல்:
மு. நாகராசா
கணவர்

(6719)

### சண்முகநாதன் - குகானந்தன்

சண்முகநாதன் - குகானந்தன் அகால மரணமானார். இவர் சண்முகநாதன் (யாழ். மாநகர சபை) பத்மாவதி தம்பதிகளின் அன்பு மகனும், முகுந்தன்(ரட்ணம் கணக்காய்வு நிறுவனம்) ஜசிந்தன், சயந்தன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற குமார் - இராசமணி தம்பதிகளின் அன்புப் பேரனும், தயாபரநாதனின் (சுவிடன்) அன்பு மருமகனும், ஜெயலக்சுமி, தவமலர், அன்னசோதி, சற்குணவதி, திலகவதி, சந்திரகாந்தி, சத்தியபவானி ஆகியோரின் பெறா மகனும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

7, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ச. பத்மாவதி
தாய்

(6721)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது